**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.382** **நாள் : 13.11.2025**

**மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட கிழக்கு மாட வீதி மற்றும் வெங்கடாபுரத்தில் ரூ.99.41 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் மாநகராட்சி மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள், அடையாறு மண்டலம், வார்டு-169க்குட்பட்ட சைதாப்பேட்டை, ஸ்ரீநகர் காலனி, கிழக்கு மாட வீதியில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.41.41 இலட்சம் மதிப்பில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய பல்நோக்கு மையக் கட்டடப் பணியினை இன்று (13.11.2025) அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்த மையத்தின் தரைத்தளத்தில் நியாயவிலைக் கடையும், முதல் தளத்தில் பெண்களுக்கான உடற்பயிற்சிக் கூடமும் கட்டப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள் வெங்கடாபுரத்தில் மூலதன நிதியில் ரூ.58 இலட்சம் மதிப்பில் தரைத்தளம் மற்றும் முதல்தளத்துடன் கூடிய திறன் மேம்பாட்டு மையக் கட்டடப் பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இதில் தரைத்தளத்தில் தையல் பயிற்சிக் கூடமும், முதல் தளத்தில் பெண்களுக்கான உடற்பயிற்சிக் கூடமும் கட்டப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சிகளில், மண்டல அலுவலர் திரு.எஸ்.செந்தில்குமரன், செயற்பொறியாளர் திருமதி பிரேமா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**